

சென்னையில் எம்.ஜி.ஆர். சென்டிரல் எதிரில் மத்திய சதுக்கம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருவதை படத்தில் காணலாம்.

### 500 கார்கள், 1,500 மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தும் வசதி:

# சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் மத்திய சதுக்கம் கட்டும் பணிகள் தீவிரம்

## ஒரு பகுதி வருகிற டிசம்பர் மாதம் திறக்க திட்டம்

சென்னை, ஜூலை.30-
எம்.ஜி.ஆர். சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் 500 கார்கள், 1,500 மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தும் வசதி கொண்ட மத்திய சதுக்கம் கட்டும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதில் ஒரு பகுதி வருகிற டிசம்பர் மாதம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்பட உள்ளதாக மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சென்டிரல் ரெயில் நிலையம்

சென்னை எம்.ஜி.ஆர். சென்டிரல் ரெயில் நிலையம், பூங்கா ரெயில் நிலையம், சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையம், ரிப்பன் மாளிகை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, தெற்கு ரெயில்வே தலைமை அலுவலகம், மூர்மார்க்கெட் ஆகியவை ஒரே பகுதியில் அமைந்திருப்பதால், சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் உள்ள ஈ.வே.ரா.பெரியார் சாலையில் எப்போதும் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து காணப்படுவது வழக்கம்.

இந்த சாலையை கடக்க நெடுஞ்சாலைத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதையை எவரும் முறையாக பயன்படுத்துவதில்லை. வாகனங்களுக்கு இடையே ஆபத்தான நிலையில் சாலையை கடந்து செல்வதை வழக்கமாக கொண்டு உள்ளனர்.

அதேபோல் முக்கியமான அலுவலகங்கள், அரசு ஆஸ்பத்திரி, ரெயில் நிலையங்கள் இருந்தும் முறையான வாகன நிறுத்தும் இடம், பயணிகள் அமர்ந்து ஓய்வு எடுக்கும் பூங்காக்கள், பாதுகாப்பான முறையில் சாலையை கடக்கும் வசதிகள் இல்லாமல் இருந்து வந்தது.

### மத்திய சதுக்கம்

பயணிகள் ஒரு போக்குவரத்தில் இருந்து மற்றொரு வகை போக்குவரத்தில் பயணம் செய்ய சிரமமின்றி செல்வதற்காக சென்னை எம்.ஜி.ஆர்.சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் உள்ள சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கும், விக்டோரியா அரங்குக்கும் இடையே உள்ள இடத்தில், நவீன தொழில்நுட்பத்தில் தொலைநோக்கு பார்வையுடன் மத்திய சதுக்கம் என்ற பெயரில் ஒரு கட்டிடம், பயணிகள் அமரும் இடம், வாகன நிறுத்தும் இடங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்காக சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதி உதவியுடன் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தால் ரூ.400 கோடி செலவில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் சென்னை சென்டிரல் பகுதி மத்திய சதுக்கதிட்டம் கட்டும் பணிகள் கடந்த 2019-ம் ஆண்டு முதல் நடந்து வருகிறது.

இந்த புதிய திட்டத்தில் ரூ.200 கோடி மதிப்பில் உலகத்தரம் வாய்ந்த நடைபாதை, பயணிகள் பயன்படுத்தும் புல்வெளி பூங்கா, அனைத்து பஸ், ரெயில் போக்குவரத்துகளின் ஒருங்கிணைப்பு, 500 கார்கள், 1,500 மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தும் வகையில் நிலத்தடியில் குறிப்பாக 90 அடி ஆழத்தில் 3 அடுக்குகள் கொண்ட வாகன நிறுத்தும் இடம் மற்றும் பயணிகள் சாலையை கடப்பதற்கான சுரங்கப்பாதை அமைப்பதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த பணிகள் நிறைவடைந்த உடன் ரூ.200 கோடி மதிப்பிலான 20 அடுக்கு கொண்ட வணிக நிறுவனங்களை கொண்ட கட்டிடம் கட்ட ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### இணைப்பு பாதைகள்

பயணியர் விடுதிகள், பன்னடுக்கு மாடி வணிக வளாகம், பொழுதுபோக்கு பூங்கா, ஓட்டல்கள் மற்றும் தரைக்கு அடியில் மூன்றடுக்கு வாகன நிறுத்தம் என சகல வசதிகளுடன் இந்த சதுக்கம் கட்டப்படவுள்ளது. ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்திரி மற்றும் தெற்கு ரெயில்வே அலுவலகங்களில் இருந்தும் இந்த சதுக்கத்துக்கு எளிதாக செல்ல ஏதுவாக, தரை வழியாகவும், சுரங்கம் வழியாகவும் இணைப்பு பாதைகள் கட்டப்பட்டு வருகிறது. சதுக்கம் கட்டப்படும் இடத்திற்கு அருகில் உள்ள பாரம்பரிய கட்டிடங்கள் முறையாக பாதுகாக்கப்படுகிறது.

இதில் ஒரு சுரங்கப்பாதை பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. மற்றொரு சுரங்கப்பாதை இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இது தவிர நெடுஞ்சாலைத்துறை சார்பில் சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் உள்ள சுரங்கப்பாதையும் சீரமைக்கப்பட உள்ளது.

### டிசம்பர் மாதம் திறப்பு

இந்த பணிகள் அனைத்தையும் முடித்து வருகிற டிசம்பர் மாதம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டு உள்ளது. புத்தாண்டு முதல் சென்டிரல் ரெயில் நிலையம் எதிரில் போக்குவரத்து நெரிசல் இல்லாத நிலை ஏற்படுவதுடன், பொதுமக்களும் இப்பகுதியில் சாலையை கடக்க முற்றிலுமாக சுரங்கப்பாதையை பயன்படுத்தும் நிலை ஏற்படும்.

சதுக்கம் கட்டுவதற்கு அளவீடு செய்யப்பட்டுள்ள இடத்தை தவிர மற்ற பகுதிகளில் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்தை செயல்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வகிக்கும் பொறுப்பு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திடம் வழங்கப்பட்டு உள்ளது. சாலையின் நெரிசலை குறைப்பதும் நகரத்தின் பல்வேறு வாகன போக்குவரத்தை ஒருங்கிணைப்பதற்காக இந்த மத்திய சதுக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தகவல்களை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறினார்கள்.